# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 25 - இலங்கை வரலாறு

## புள்ளி வழங்கும் திட்டம்

- பகுதி I - 01 x 40 = 40

பகுதி II

| | | |
|---|---|---|
| கட்டாய வினா | = | 18 |
| ஏனைய 03 வினாக்கள் 14 × 3 வீதம் | = | 42 |
| II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி | = | 60 |

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................................. ✓ △ $\frac{4}{5}$
..................................................................................
..................................................................................

(ii) .................................................................................. ✓ △ $\frac{3}{5}$
..................................................................................
..................................................................................

(iii) .................................................................................. ✓ △ $\frac{3}{5}$
..................................................................................
..................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (I කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி I)
History of Sri Lanka I (Part I)

25 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

* இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப** உமது விடையைக் குறித்துக் காட்டுக.
* பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

* **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டுமே ஏதேனுமொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) புத்தல (2) தொறவக்க (3) படதொம்பலென
   (4) குதிரைமலை (5) அந்தகங்கி (......)

2. (1) உபதிஸ்ஸகம (2) அநுராதகம (3) உருவெலகம
   (4) விஜிதகம (5) புனகம (......)

3. (1) சொறுதீ (2) கஜரகமி (3) சேவிகோவள
   (4) அம்பயென் (5) பலசிறுவாவி (......)

4. (1) கஜபதி (2) பூபதி (3) பதிவிபதி
   (4) மஹிபதி (5) பிருதிவிவல்லப (......)

5. (1) ரத்னாவலி (2) கல்யாணவதி (3) லீலாவதி
   (4) சமுத்ராதேவி (5) திரிலோகசுந்தரி (......)

6. (1) கங்கசிரிபுர (2) செங்கடகல (3) சந்திரேதுறை
   (4) கட்டுபுலுவுள (5) சிறிவட்டனபுர (......)

7. (1) ஜெரனிமோ டி அசவிடோ (2) ஜோர்ஜ் டி அல்மெய்டா (3) லொறன்சோ டி அல்மெய்டா
   (4) நூனோ அல்வாரிஸ் பெரேரா (5) ஜோர்ஜ் டி அல்பேக்கர் (......)



Department of Examinations - Sri Lanka

8. (1) றைக்லொப் வான் கூன்ஸ் (2) ஜான் ஷ்ரொய்டர்
(3) ஜான் மட்சுய்க்கர் (4) வில்லெம் வான் இம்ஹொவ்
(5) ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்கன் (......)

9. (1) நான்கு கோறளை (2) ஏழு கோறளை (3) சப்ரகமுவ
(4) நுவரகலாவிய (5) உடநுவர (......)

10. (1) டி. எஸ். சேனநாயக்க (2) ஜோன் கொத்தலாவல
(3) டட்லி சேனநாயக்கா (4) சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க
(5) வில்லியம் கோபல்லாவ (......)

● 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11. (1) தேவநம்பியதிஸ்ஸவின் ஆட்சி - பிக்குணி சங்கமித்தை
(2) மகாசேனனின் ஆட்சி - சங்கமித்த பிக்கு
(3) ஸ்ரீ மேகவண்ணனின் ஆட்சி - ஹேமமாலாவும் தந்தனும்
(4) மகாநாமனின் ஆட்சி - பாஹியன் பிக்கு
(5) தாதுசேனனின் ஆட்சி - ஹியுவன்சாங் பிக்கு (......)

12. (1) மூன்றாம் விஜயபாகு - தம்பதெனிய இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(2) சேனாசம்மத விக்கிரமபாகு - கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(3) முதலாம் இராஜசிங்கன் - சீதாவக்கை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(4) வில்லெம் ஜே கொஸ்டர் - இலங்கையின் முதலாவது ஒல்லாந்த ஆளுநர்
(5) பிரெடெரிக் நோர்த் - இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் (......)

13. (1) திருக்கோணேஸ்வர ஆலயம் - திருகோணமலை
(2) திருக்கேதீஸ்வரம் ஆலயம் - மன்னார்
(3) முன்னேஸ்வரம் ஆலயம் - சிலாபம்
(4) பெரண்டி ஆலயம் - சீதாவாக்கை
(5) திருக்கோவில் - நல்லூர் (......)

14. (1) ரொபர்ட் பிறௌன்றிக் - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியமை
(2) தோமஸ் மெயிற்லண்ட் - இராஜகாரிய முறையை ஒழித்தமை
(3) எட்வர்ட் பான்ஸ் - கொழும்பு - கண்டி வீதி அமைக்கப்பட்டமை
(4) ஆர்தர் கோர்டன் - கலாவெவ புனருத்தாரணம் செய்தமை
(5) ஆர்தர் ஹவ்லொக் - தானிய வரியை ஒழித்தமை (......)

15. (1) சைவப் பிரகாச சபை - ஆறுமுக நாவலர்
(2) பௌத்த பிரம்ம ஞான சபை - ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(3) இராமகிருஷ்ண மிஷன் - சுவாமி விவேகானந்தர்
(4) மகாபோதி சங்கம் - அநகாரிக தர்மபால
(5) இரத்மலானை பரமதம்மசேதிய பிரிவேனா - ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர் (......)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை**. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

Department of Examinations - Sri Lanka

| | X | Y |
|---|---|---|
| 16. | (i) பிளினி | A இலங்கையைக் குறிக்கும் முதல் தேசப்படம் |
| | (ii) தொலமி | B உரோமுக்குச் சென்ற இலங்கையின் தூதுப் பயணம் பற்றிய விவரிப்பு |
| | (iii) பாகியான் | C யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விவரிப்பு |
| | (iv) கொஸ்மஸ் | D அபயகிரி விகாரையின் தலதா பெரஹர பற்றிய விவரிப்பு |
| | (v) இபன் பதூதா | E இலங்கையின் புராதன வியாபாரம் பற்றிய விவரிப்பு |

(1) ABCED (2) BADEC (3) CBAED (4) DAEBC (5) DBCEA (......)

| | X | Y |
|---|---|---|
| 17. | (i) சாரார்த்தசங்கிரகம் | A கம்பளைக் காலம் |
| | (ii) பூஜாவலிய | B கோட்டைக் காலம் |
| | (iii) மயூர சந்தேச | C தம்பதெனியாக் காலம் |
| | (iv) காவ்ய சேகர | D பொலன்னறுவைக் காலம் |
| | (v) புத்சரண | E அநுராதபுரக் காலம் |

(1) AECBD (2) CEDBA (3) DEBCA (4) EBADC (5) ECABD (......)

| | X | Y |
|---|---|---|
| 18. | (i) முதலாம் இராஜராஜன் | A சீனா |
| | (ii) மாகன் | B பாண்டிய |
| | (iii) சந்திரபானு | C காலிங்க |
| | (iv) குலசேகரன் | D சோழ |
| | (v) சொங்கோ | E ஜாவக |

(1) BADEC (2) BDCAE (3) DCEBA (4) DBECA (5) ECBAD (......)

| | X | Y |
|---|---|---|
| 19. | (i) ஒவிடோர் | A கனிஷ்ட வர்த்தகர் |
| | (ii) மஹாபத்தே கப்பித்தான் | B வருமானத்துக்குப் பொறுப்பான அதிகாரி |
| | (iii) ஒண்டர் கூப்மன் | C திஸாவ |
| | (iv) விடோர் டி பசெந்தா | D சிரேஷ்ட வர்த்தகர் |
| | (v) ஒபர் கூப்மன் | E கறுவா திணைக்களத்தின் அதிகாரி |

(1) BEACD (2) CAEBD (3) CBDAE (4) DBECA (5) EBADC (......)

| | X | Y |
|---|---|---|
| 20. | (i) ஜோனதன் போர்ப்ஸ் | A புராதன இலங்கை |
| | (ii) தோமஸ் ஸ்கின்னர் | B இலங்கை |
| | (iii) டெனன்ட் (எமர்சன்) | C காட்டுப் பெருக்கம் (Jungle Tide) |
| | (iv) ஜோன் ஸ்டில் | D இலங்கையில் பதினொரு ஆண்டுகள் |
| | (v) ஹென்றி பார்க்கர் | E இலங்கையில் ஐம்பது ஆண்டுகள் |

(1) ABCED (2) BCDAE (3) BADEC (4) BDECA (5) EBDAC (......)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருத்தமானது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறிகளுள்** எழுதுக.

**21. புராதன நீர்ப்பாசனப் பணிகள்**

(1) தேவநம்பிய தீஸ்ஸ மன்னன் நுவரவெவையைக் கட்டுவித்தான்.
(2) வசப மன்னன் காலம் தொடக்கம் பெரிய குளங்களைக் கட்டுதல் ஆரம்பமானது.
(3) தனியார் உரிமையின் கீழ் சில குளங்கள் இருந்தன.
(4) தீஸ்ஸ வாவியையும் கலாவாவியையும் இணைக்கும் கால்வாய் யோத கங்கை என அழைக்கப்பட்டது.
(5) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலம் நீர்ப்பாசன அபிவிருத்தியின் உச்ச நிலையைக் குறிக்கின்றது.

(......)

**22. நிஸ்ஸங்க மல்லன் எதிர்நோக்கிய சவால்கள்**
(1) விவசாயிகளின் (கொவிகுல) எதிர்ப்பு
(2) கலிங்க வம்சத்தின் தனித்துவமாதல்
(3) பாண்டிய வம்சத்தவர் சிம்மாசனத்துக்கு உரிமை கோருதல்
(4) முன்னைய ஆட்சியில் உயர் பதவி வகித்தவர்களால் ஏற்பட்ட சவால்கள்
(5) சதுரங்கமண்டலங்களின் ஆக்கிரமிப்புகள் (......)

**23. ஒல்லாந்தரின் சமயக் கொள்கை**
(1) பாடசாலைகள், தேவாலயங்கள் மூலம் சமயப் பிரசாரங்கள் செய்யப்பட்டமை
(2) புரட்டஸ்தாந்து சமயத்துக்கு மட்டும் அனுசரணை வழங்கியமை
(3) கத்தோலிக்க தேவாலயத்துக்கு முக்கிய இடம் அளித்தமை
(4) உரோமன் கத்தோலிக்க சமயத்தை அடக்கியமை
(5) சிவில் நிர்வாகத்தின் உயர் பதவிகளை புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு மட்டும் வழங்கியமை (......)

**24. கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவின் சிபாரிசுகள்**
(1) இராஜகாரிய முறையை ஒழித்தமை
(2) சுதேசிகளுக்குப் புதிய காணிகள் வழங்கப்பட்டமை
(3) ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்பட்டமை
(4) சீரான நீதி முறைமை நாட்டப்பட்டமை
(5) சட்ட நிருவாக, சட்டநிரூபண சபைகள் தாபிக்கப்பட்டமை (......)

**25. பொன்னம்பலம் அருணாசலம்**
(1) அரசியல் சீர்திருத்தம் பற்றி விசேட கவனத்தைச் செலுத்தியவராவார்.
(2) நாட்டில் பல்கலைக்கழகம் ஒன்றை தாபிக்க வேண்டுமெனக் கருத்து வெளியிட்டார்.
(3) இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவராவார்.
(4) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைத் தாபிக்க காரணமானவராவார்.
(5) இலங்கை சிவில் சேவையில் ஈடுபட்டவராவார். (......)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்க.

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின ........................................ **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின ........................................ **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின ........................................ **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின ........................................ **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின ........ **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** முதலாம் விஜயபாகு தொடர்பான கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) முதலாம் விஜயபாகு இளமைக் காலத்தில் கீர்த்தி இளவரசன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.
(B) முதலாம் விஜயபாகுவின் மகள் பாண்டிய இளவரசனைத் திருமணம் செய்தாள்.
(C) பனாகடுவ செப்பேடு, முதலாம் விஜயபாகு எதிர்நோக்கிய தடைகள் பற்றி வெளிப்படுத்துகிறது.
(D) முதலாம் விஜயபாகுவினால் பௌத்தர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன. (......)

Department of Examinations - Sri Lanka

27. யாப்பஹுவ இராசதானி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) யாப்பஹுவ சுபகிரி என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
(B) யாப்பஹுவ இராச்சியத்தின் முதலாவது அரசன் முதலாம் புவனேகபாகு ஆவான்.
(C) யாப்பஹுவ அரண்மனை பற்றி சிறப்பான விவரிப்பினை மாக்கோபோலோ வழங்கியுள்ளார்.
(D) புனித தந்த தாது பொலன்னறுவையிலிருந்து யாப்பஹுவவுக்குக் கொண்டுவரப்பட்டது. (......)

28. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கலாசார மறுமலர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) ஆரியமல் இயக்கம் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கான தலைமைத்துவம் தாங்கி ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டது.
(B) அநகாரிக தர்மபால பௌத்தசமய மறுமலர்ச்சிக்கு பெரும்பங்களிப்புச் செய்தார்.
(C) ஆறுமுகநாவலரின் தலைமையின் கீழ் இந்துசமய மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பமாகியது.
(D) இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி ஏ. சீ. எஸ். ஹமீட் தலைமையின் கீழ் ஆரம்பமாகியது. (......)

29. மதுவிலக்கு இயக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) பிரித்தானியர்களின் மதுவரிக் கொள்கைக்கு எதிராகக் கிளம்பிய போராட்டமே மதுவிலக்கு இயக்கமாகும்.
(B) பிரம்மச்சாரி வலிசிங்க ஹரிச்சந்திர என்பவரே இந்த இயக்கத்தின் முதலாவது தலைவர் ஆவார்.
(C) ஹாபிடிகம கோறளையின் மதுவிலக்கு சபை செயற்பாடுகள் மிக்க அமைப்புகளில் ஒன்றாகும்.
(D) ஜேம்ஸ் டி அல்விஸ் என்பவரே மதுவிலக்கு இயக்கத்தின் முன்னோடி ஆவார். (......)

30. 1972 குடியரசு அரசியல் யாப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) ஜனாதிபதி பெயரளவில் நிறைவேற்று அதிகாரமுடையவராகச் செயற்பட்டார்.
(B) சட்டசபை ஓரங்க சபையாகத் (Unicameral) தாபிக்கப்பட்டது.
(C) ஜனாதிபதியை குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் நீக்க முடியும்.
(A) மக்களின் மனக்குறைகளைக் கவனிப்பதற்கு (ஒம்புட்ஸ்மன்) குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். (......)

- **31 தொடக்கம் 35 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

31. ஸ்ரீ மேகவர்ணன் மகாசேனனின் மகன் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டு எது?
(1) ஜேதவன கல்வெட்டு (2) பாலுமக்கிச்சாவ கல்வெட்டு
(3) தோணிகல கல்வெட்டு (4) சிலைக்கட்டுப கல்வெட்டு
(5) மதுனை தூண் கல்வெட்டு (......)

32. இலங்கையின் கடைசி சிங்கள மன்னன் என்று கருதப்படுபவன் யார்?
(1) சேனரத் மன்னன் (2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(5) இராஜாதி இராஜசிங்கன் (......)

33. சிலோன் சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?
(1) டபிள்யூ. எஸ். குணவர்த்தன (2) ஆனந்த குமாரசுவாமி
(3) ஜேம்ஸ் பீரிஸ் (4) ஈ. டபிள்யூ. அதிகாரம்
(5) விக்டர் கொரயா (......)

34. கொழும்பு சாஹிராக் கல்லூரியை தாபித்தவர் யார்?
(1) பதியுதீன் மஹ்மூத் (2) அப்துல் காதர்
(3) ரி. பி. ஜாயா (4) எம். சி. சித்திலெவ்வை
(5) ஏ. எச். எம். இஸ்மாயில் (......)

35. இலங்கையில் இலவசக் கல்வியின் தந்தை என்று கருதப்படுபவர் யார்?
(1) ஈ. ஏ. நுகவெல (2) சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
(3) ரிச்சட் அலுவிகார (4) எம். டி. பண்டா
(5) பிலிப் குணவர்த்தன (......)



Department of Examinations - Sri Lanka

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, உரிய **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விளக்குகின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | இலங்கையில் பிக்குமார்களிடையே முதலாவது நிகாய பிரிவினை மகாசேனனின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தது. | மகாசேனன் அபயகிரி விகாரையைப் பிக்கு சமூகத்திடம் நன்கொடையாக வழங்கியமை இலங்கையில் நிகழ்ந்த முதலாவது நிகாய பிரிவினையைக் குறிக்கின்றது. | (..........) |
| **37.** | [illegible] பொலந்நறுவை ஆட்சியாளர்கள் பலருள்ளும் கொடூரமான ஆட்சியாளன் ஆவான். | மாக மன்னனின் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. | (..........) |
| **38.** | இலங்கையின் கடைசி ஒல்லாந்த ஆளுநர் ஜே. ஜீ. வன் அங்கல்பீக் ஆவான். | எலதெத்த, பண்டாரகொஸ்வத்த ஆகிய இடங்களில் கண்டி மன்னனின் சிறைக்கைதியாக ரொபர்ட் நொக்ஸ் நீண்ட காலம் வசித்து வந்தான். | (..........) |
| **39.** | பிரித்தானிய ஆட்சியாளர்கள் 19 ஆம் நூற்றாண்டில் முக்கியமாக அரசியல், பொருளாதார காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பெருந்தெருக்கள் வலையமைப்பை நிர்மாணித்தனர். | போக்குவரத்தினை இலகுபடுத்துவதற்கும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உட்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கும், கண்டி மாவட்டங்களில் நிர்வாகத்தை வினைத்திறனுடன் நடாத்துவதற்கும் பெருந்தெருக்களை அமைத்தல் அவசியம் என்பதை அக்கால பிரித்தானிய ஆட்சியாளர் நன்கு புரிந்து கொண்டிருந்தனர். | (..........) |
| **40.** | [illegible] 1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்துக்கான உடனடிக் காரணமாகும். | 1915 சிங்கள முஸ்லிம் கலவரம் பற்றிய வழக்கு [illegible] பீரிஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. | (..........) |

* *

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **25**
විෂයය / பாடம்: **இலங்கை வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 5 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 5 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 5 | 23. | 3 | 33. | 5 |
| 04. | 1 | 14. | 2 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 4 | 15. | 5 | 25. | 4 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 4 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 1 | 37. | 2 |
| 08. | 5 | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 5 | 19. | | 29. | 2 | 39. | 5 |
| 10. | 5 | 20. | 4 | 30. | 1 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

25 T I

## இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* ※ முதலாம் வினா கட்டாயமானது.
* ※ முதலாம் வினாவுக்கும் B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) ஆனையிறவு | (ii) கொடவாய | (iii) கிரிந்தி ஓயா |
| (iv) வடமேல் மாகாணம் | (v) கல்பிட்டி | (vi) களுத்துறை |
| (vii) தெதுரு ஓயா | (viii) போத கலை | (ix) கொழும்பு |
| (x) பலானை | (xi) சேனநாயக்க சமுத்திரம் | (xii) மாத்தறை |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

### பகுதி B

2. பொலன்னறுவைக் காலத்தின் இறுதிவரை இலங்கையின் வரலாற்றை உருவாக்குவதில் வெளிநாட்டுப் புவியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை பின்வரும் கருப்பொருள்களின் கீழ் பரிசீலிக்குக.
   (i) இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருத்தல்
   (ii) இந்து சமுத்திரத்தின் மத்திய இடத்தில் அமைந்திருத்தல் (16 புள்ளிகள்)

3. "காவந்தீச மன்னன் இட்டுக் கட்டிய அத்திவாரத்தின்மீது துட்டகைமுனு மன்னன் நீண்ட அரசியல் ஒன்றிணைப்பினை ஏற்படுத்தினான்."
   (i) மாகம இராச்சியத்தைத் தாபித்த ஆட்சியாளரின் பெயரைத் தருக. (01 புள்ளி)
   (ii) காவந்தீச மன்னனுக்கு முன்னைய ஆட்சியாளர் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (iii) காவந்தீசனின் சாதனைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
   (iv) துட்டகைமுனுவின் அரசியல் சாதனைகள் பற்றி விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

4. இராசரட்டை நாகரிகம் அழிவடைந்தமைக்கும் வீழ்ச்சியடைந்தமைக்கும் ஏதுவான முக்கிய காரணிகளை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கக்குறிப்புகள் எழுதுக.
   (i) கஜபா மன்னன்
   (ii) முதலாம் விஜயபாகுவினால் சோழர் ஆதிக்கத்திலிருந்து இராஜரட்டை விடுதலைபெறுதல்
   (iii) தம்பதெனியா காலத்தில் கலாசாரம்
   (iv) ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரை

(08 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6. போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களில் அவர்களின் ஆதிக்கத்தைத் தாபித்த விதத்தினை பின்வரும் விடயங்களின் கீழ் பரிசீலிக்குக.
   (i) கோட்டை இராச்சியத்தில் தங்களின் ஆதிக்கத்தைத் தாபித்தல் (10 புள்ளிகள்)
   (ii) யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுதல் (6 புள்ளிகள்)

7. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சாதனைகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
   (i) ஒல்லாந்தருடனான தொடர்புகள்
   (ii) பௌத்த மறுமலர்ச்சி (16 புள்ளிகள்)

8. "டொனமூர் அரசியல் யாப்பு பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கை அரசியல் யாப்பு விருத்தியில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும்."
   (i) டொனமூர் ஆணைக்குழு வருகைதந்த போது இலங்கையின் பிரித்தானிய ஆளுநராக இருந்தவரின் பெயரைத் தருக. (01 புள்ளி)
   (ii) டொனமூர் பிரபு தவிர்ந்த அந்த ஆணைக்குழுவில் இருந்த வேறு **இரண்டு** ஆணையாளர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
   (iii) குடியேற்ற நாட்டு அரசாங்கம் டொனமூர் ஆணைக்குழுவை நியமித்தமைக்கு காரணமான விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iv) டொனமூர் அரசியல் யாப்பின் முக்கியத்துவத்தை அதன் முக்கிய அம்சங்களின் அடிப்படையில் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

9. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.
   (i) பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோப்பிப் பயிர்ச்செய்கை
   (ii) 1848 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்
   (iii) டி. எஸ். சேனநாயக்க
   (iv) தேசியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

(08 x 2 = 16 புள்ளிகள்)

* * *

Department of Examinations - Sri Lanka

(All Rights Reserved)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

இலங்கை வரலாறு
History of Sri Lanka | 25 | S

வினா இல. / Question No. | 1

சுட்டெண் / Index No.



Department of Examinations - Sri Lanka

# இலங்கை வரலாறு
# இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி.1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும், ஏனைய B,C பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.
(மொத்தம் நான்கு வினாக்கள்)

**(1) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புற உருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | ஆனையிறவு | (ii) | கொடவாய | (iii) | கிரிந்தி ஓயா |
| (iv) | வடமேல் மாகாணம் | (v) | கல்பிட்டி | (vi) | களுத்துறை |
| (vii) | தெதுறு ஓயா | (viii) | யோத வாவி | (ix) | கொழும்பு |
| (x) | பலான | (xi) | சேனாநாயக்க சமுத்திரம் | (xii) | மாத்தறை |

**(சரியாகக் குறித்துப் பெயரிட்டால் 1 புள்ளி வீதம் வழங்கல் வேண்டும்)**

(2) **பொலன்னறுவைக் காலத்தின் இறுதிவரை இலங்கையின் வரலாற்றை உருவாக்குவதில் வெளிவாரி புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை பின்வரும் கருப்பொருளின் கீழ் பரிசீலிக்குக.**

i. **இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருத்தல்**

- இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதால் இந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமயம், கலாசாரம் ஆகிய துறைகளை வடிவமைப்பதில் தாக்கம் ஏற்பட்டமை.

**அரசியல்**

- மக்கள் குடிப்பெயர்வு நிகழுதல் ( விஜயன் உள்ளிட்ட குழுவினர், பத்தகச்சானா குமாரியும் அவளது சகோதரனும்)
- தென் இந்திய ஆக்கிரமிப்புகள் ஏற்படுதல். (எல்லாளன், ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் முதலாம் இராஜராஜன்)
- இலங்கை அரசர்கள் தென் இந்தியாவை ஆக்கிரமிப்புச் செய்தல். (முதலாம் பராக்கிரமபாகு)
- இந்நாட்டின் அரசியல் கலாசாரம் உருவாக்குவதில் செல்வாக்கு (மகுடாபிஷேகம், அரசுரிமை, நிர்வாக முறைமை, பதவிப் பெயர்கள் ஆகியவை)
- இலங்கை ஆட்சியாளர்கள் போர் உதவி ஒத்துழைப்பு பெறுதல் ( இளநாகன், மானவம்ப, அகம்படி சேனைகளின் சேவை)

Department of Examinations - Sri Lanka

- தென் இந்திய ஆட்சியாளர் சிலர் ஒத்துழைப்பு பாதுகாப்பு கருதி இந்நாட்டிற்கு வருகை தருதல். (இரண்டாம் சேன ஆட்சிக்காலம், நான்காம் தப்புல ஆட்சிக்காலம்)

- தென் இந்திய அரசியலின் தீர்மானம் மிக்க மாற்றங்கள் இந்த நாட்டின் அரசியலில் தாக்கம் ஏற்படுத்தல்.

**பொருளாதாரம்**

- வர்த்தகத் தொடர்புகள் நிலவியமை. (த பஸ்ஸ் பல்லுக சேன, குத்திக)

- தென் இந்திய வர்த்தக வகுப்பினர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் (வலஞ்சியார், நானாதேசி, நகரத்தார்)

- பல்வேறு கைத்தொழில்கள் ஏற்படுதல். ( பதினெட்டு வகை குலத்தைச் சேர்ந்த கலைஞர்கள் வருகை தருதல்.)

- விவசாயப் பொருளாதாரத்துக்கு அடிப்படையாகுதல்.

**சமயமும் கலாசாரமும்**

- பௌத்த சமயத்தை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தலும் பௌத்த ஒழுங்கு முறைகள் இந்நாட்டில் தாபிக்கப்படுதலும்.

- ஆவணங்கள், எழுத்துக்கள் மொழி வடிவமைப்பு பெறுதல்.

- கலைகள், கட்டிடக்கலை நுட்பம் என்பவற்றின் செல்வாக்கு (ஓவியம், சிற்பம், செதுக்கல் உள்ளிட்டவை)

- பௌத்த வணக்கத்துக்குரிய பொருள்கள் உரித்தாகுதல். (சர்வக்ஞ தாது, ஸ்ரீ மகாபோதி தந்ததாது)

- சாதிப்பாகுபாடு, பழக்கவழக்கங்கள் என்பவற்றில் ஏற்பட்ட செல்வாக்கு.

- மகாயான சமயத்தின் செல்வாக்கு

- இந்து, சமண சமயங்களின் செல்வாக்கு

- இந்து கலாசார செல்வாக்கு ( பொலன்னறுவையில் அமைந்துள்ள சிவாலயம், பொலன்னறுவைக் காலத்தில் சந்திர வட்டக்கல்லின் எருதுகள் அகற்றப்பட்டமை.)

ii. **இந்து சமுத்திரத்தின் மத்திய இடத்தில் அமைந்திருத்தல்**

- இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பதால் புராதன காலத்திலிருந்தே வெளி நாடுகளுடன் விருத்தியடைந்த வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருக்க முடிந்தமை.

- இந்தத் தொடர்பு மேற்கே உரோம் வரையும் கிழக்கே சீனா வரையும் பரந்திருந்தமை.

- இந்தியா, சீனா, உரோம், பாரசீகம், அபிசீனியா, எதியோப்பியா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் என்பவற்றுடன் தொடர்புகள் நிலவியமை. (உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுதல் முக்கியமாகும்.)

Department of Examinations - Sri Lanka

- இலங்கையின் இறக்குமதி ( பீங்கான், மட்பாண்டங்கள், பட்டுத் துணி, வாசனைத் திரவியங்கள், கற்பூரம், குதிரைகள்) ஏற்றுமதிகள் (முத்து, இரத்தினங்கள், யானை, யானைத்தந்தம், ஆமையோடு) வர்த்தகத்தில் ஈடுபடுதல்.

- கிழக்கு மேற்கு நாடுகளின் வியாபாரப் பொருள்களை ஒன்று சேர்த்துப் பங்கிடும் சர்வதேச வியாபார மத்திய நிலையமாக இலங்கை அமைந்திருந்தமை. ( பாரசீகர்கள், முஸ்லிம்கள், கொஸ்மஸ்ஸினால் எழுதப்பட்ட டொபோகிரபியா கிறிஸ்டியானா ஆக்கத்தில் காணப்படும் விபரிப்பு)

- வெளிநாட்டு எழுத்தாளர்கள் இலங்கையைப் பற்றி அறிந்து தமது நூல்களில் இலங்கை பற்றிய விவரங்களை உள்ளடக்கியமை. ( கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க இனத்தவரான ஒனெசிக்கிருடஸ், மெகஸ்தனீஸ், இரடொஸ்தினீஸ், பிளினி, தொலமி, பாஹியன், சௌ ஓ ஜாகுவா, சுலைமான், அல்பதானி, அல்புருணி, அல் இத்ரிஸி)

- வியாபாரத் தொடர்புகள் முக்கியமானதாக இருப்பினும் அதனூடாக குறிப்பிட்டளவுக்கு பௌத்த சமய, கலாசார தொடர்புகளும் விருத்தியடைந்தமை. ( பௌத்த பிக்குமார் வர்த்தகக் கப்பல்களில் வருகை தந்தமை, வஜ்ரபோதி, பாஹியன், குணவர்மன்)

- தீவைச் சுற்றி அமைந்த துறைமுகங்கள் காரணமாக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமை.

- மேலே குறிப்பிடப்பட்ட தொடர்புகள் நிலவியதாக உறுதிப்படுத்தும் தொல்பொருள் காரணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (உரோம நாணயங்கள், சீன மட்பாண்டங்கள்)

**(16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**3) காவந்தீச மன்னனால் இடப்பட்ட அத்திவாரத்தின் மீது துட்டகைமுனு மன்னன் தீவில் அரசியல் ஒன்றிணைப்பினை ஏற்படுத்தினான்.**

**i. மாகம இராச்சியத்தைத் தாபித்த ஆட்சியாளனின் பெயரைத் தருக.**

- மகாநாகன்

**(01 புள்ளி)**

**ii. காவந்தீச மன்னனுக்கு முன்னைய ஆட்சியாளர் இருவரின் பெயர்களைத் தருக.**

- யதால திஸ்ஸ, கோதாபய

**(02 புள்ளிகள்)**

**iii. காவந்தீசனின் சாதனைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

உருகுணையை ஒருங்கிணைத்தமை

- திருமணத் தொடர்பு மூலம் தெற்கு ஆட்சி வலயத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல்.
  உதாரணம் : களனி, கிரிநுவர
- சமயத் தொடர்பு மூலம் கிழக்கு வலயங்களான சேரு, லோணஈ சோம ஆட்சி அலகுகளை அடிமைப்படுத்தியமை.

சமயம்

- பிக்குமார்களின் ஆலோசனை வழிகாட்டல்களை தனது மகன்மாரான இளவரசர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலும் அவர்களிடையே ஒற்றுமையைப் பேணுவதாக சத்தியம் ஒன்றைப் பெறுதலும்.
- தெற்கிலும் கிழக்கிலும் சமய வழிபாட்டிடங்களை விருத்தி செய்து பிக்குமார்களினதும் மக்க'ளினதும் நன்மதிப்பைப் பெற்றமை.
- சமய வழிபாட்டிடங்களை நிர்மாணித்தல். மாகமதிஸ்ஸ விகாரை சேருவாவில, மங்கலமக விகாரை, திருகோணமலை வெல்கம் விகாரை, உருகுணை சித்துல்பவ்வ விகாரை ஆகியவற்றைக் கட்டுவித்தலும் மகியங்கனை விகாரையைப் புனரமைப்புச் செய்தலும்.

படை ஒழுங்கமைப்பு

- பல்வேறு திறமை மிக்க பத்து மகா மல்லர்கள் (தசா மகா யோதய) கொண்ட பலம் வாய்ந்த நால்வகைப் படைகளை ஒழுங்கமைத்தல்.
- ஒற்றர் சேவையைப் பேணியதுடன் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்தலும் சேகரித்தலும்.
- சகோதரர் இருவரிடையே ஏற்படும் போரின் போது பக்கச் சார்பின்றி செயற்பட வேண்டுமென படையினரிடம் வாக்குறுதி பெறுதல்.

Department of Examinations - Sri Lanka

- தீகாபய இனளவரசனை ஈடுபடுத்தி கச்சதித்த போன்ற பாதுகாப்பான இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியமை.

பொருளாதார அபிவிருத்தி

- சத்த திஸ்ஸ இளவரசனை ஈடுபடுத்தி தீகவாவி வலயத்தை செழிப்புள்ளதாக்குதல்.
- துரதிஸ்ஸ, திகாவாவி போன்ற சிறு குளங்களை நிர்மாணித்து உருகுணையின் விவசாய நடவடிக்கைகளை முன்னேற்றுதல்.

**(05 புள்ளிகள்)**

iv. **துட்டகைமுனுவின் அரசியல் சாதனைகள் பற்றி விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.**

- காவந்திஸ்ஸ மன்னனின் பின்னர் மாகமவுக்கு வலிமை மிக்க தலைமைத்துவத்தை வழங்குதல்.
- பிக்குமார்களின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புடன் தனது தாயாரின் பங்களிப்போடு எல்லாளனுக்கு எதிராக போரிடல்.
- முப்பத்திரண்டு தமிழ் ஆட்சியாளர்களைத் தோல்வியடையச் செய்து விஜிதபுர போரில் தமிழர் ஆதிக்கத்தை அடக்குதல்.
- இரண்டு போர்களில் எல்லாளனைக் கொன்று பல்லூகனைத் தோற்கடித்தல்.
- இலங்கை முதன் முறையாக ஒன்றிணைக்கப்படுதல். இதன் மூலம் புராதன இலங்கை அரசைக் கட்டியெழுப்புதல் முழுமை பெறுதல்.
- அனுராதபுரத்தைத் தனது ஆதிக்க மத்திய நிலையமாக ஆக்குதல். இவ்வாறு தனது தந்தையினால் இடப்பட்ட அடிப்படையில் வெளிநாட்டு கிரகணத்திலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு இந்த மன்னன் செயற்பட்ட முறை பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**4) இராசரட்டை நாகரிகம் அழிவடைந்தமைக்கும் வீழ்ச்சியடைந்தமமைக்கும் ஏதுவான முக்கிய காரணிகளை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.**

- கி.பி 13 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியிலிருந்து இராசரட்டைப் பிரதேசம் சனத் தொகையற்றுப் போனதற்கும் புராதன விகாரைகள் தூபிகள் நீர்பாசனம் என்பன கவனிப்பாரில்லாது போவதற்கும் காரணமான விடயங்கள் பற்றி அறிஞர்கள் கருத்துக்கள் பலவற்றை முன் வைத்துள்ளனர். அவற்றில் கீழே குறிப்பிடப்படும் கருத்துக்கள் மிகவும் பிரசித்தமானவையாகும்.

**வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் உள்நாட்டுக் குழப்பங்களும்**

- 1215 இல் இடம்பெற்ற கலிங்க மாகனின் படையெடுப்பும் அவனின் ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட கடுமையான பௌத்த விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் அரசியல் நடவடிக்கைகள் பெருமளவு சிக்கலுக்குள்ளாகியமை.

- மாகன் செல்வம் மிக்க மக்களை இம்சைப்படுத்தி செல்வத்தைக் கொள்ளையடித்து ஏழைகளாக்கியதுடன் சிங்களவருக்கு உரித்தான சொத்துக்களை கேரள படை வீரர்களுக்கு வழங்கியமை. விகாரைகள் பிரிவேனாக்கள் போன்ற நிறுவகங்களை படையினர் வசிப்பதற்கு ஒப்படைத்தமை.

- இதற்கு முன்னர் நிகழ்ந்த தென் இந்திய ஆக்கிரமிப்புக்களை தோற்கடித்து வெற்றி பெற்ற சிங்கள இளவரசர்களுக்கு மீண்டும் அனுராதபுரம் அல்லது பொலன்னறுவையின் ஆதிக்கத்தைப் பெறச் சந்தர்ப்பம் கிடைத்த போதும் மாகனின் ஆட்சி அத்தகைய கடுமையான அந்த சந்தர்ப்பம் பின்னர் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்படவில்லை.

- இக்காலத்தில் சாவக சந்திர குப்தனின் ஆக்கிரமிப்பு இரண்டு நிகழ்ந்தது. வடக்கே சுயாதீன தமிழ் இராச்சியம் ஒன்று வேறாக ஏற்படுத்தல் நிகழ்ந்தமை.

**நிர்வாகக் கட்டமைப்பு வீழ்ச்சியடைதல்**

- வேறுஎந்தக்காலப்பகுதியையும்விடமுதலாம்பராக்கிரமபாகுமன்னன்காலத்தில்மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாகம் அரசனுக்குப் பின்னர் வீழ்ச்சியடைந்து கலிங்க மாகனின் கொள்கையான உயர் வகுப்பினரை அழித்தல் என்பதன் காரணமாக நிர்வாக அறிவு படைத்த குழுவினர் இராசரட்டையிலிருந்து வெளியேறியமை காரணமாக அரசியல், பொருளாதார சமூகக் கட்டமைப்பு வீழ்ச்சியடைதல் நிகழ்ந்தமை.

**மண் வளம் குன்றியமையும் மண்ணரிப்பு ஏற்படுதலும்**

- மண் வளம் குன்றியமையும் மண்ணரிப்பும் காரணமாக நீர்ப்பாசனம் படிப்படியாக பாழடைந்ததால் இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைய அடிப்படையாக அமைந்தது. எனினும் முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் குளங்கள் நீர்பாசனக் கால்வாய்கள் என்பன உயர் முன்னேற்றம் கண்டிருந்தது எனவும் பொருளாதார ரீதியில் அக்காலம் வளர்ச்சி மிக்க நிலையில் இருந்த போதும் அடுத்து வந்த எட்டு ஆண்டுகளுக்குள் அந்த நிலைமை உடனடியாக மாற்றமடைவதற்கு இந்த விடயங்கள் மட்டும் செல்வாக்குச் செலுத்தியது எனக் கருதுவது சிரமமாகும்.

**காலநிலை மாற்றம்**

- காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் கஷ்டங்கள் குறுகிய காலப்பகுதிக்கு மட்டுமே ஆனதினால் அது இராசரட்டையின் வீழ்ச்சிக்கு காரணமானது எனக் கருதுதல் சிரமமானதாகும்.

Department of Examinations - Sri Lanka

**மலேரியா தொற்று நோய்**

- இந்த நாகரிகம் வீழ்ச்சியடைவதற்கு மலேரியா நோய் அடிப்படையானது எனக் குறிப்பிடுவதற்கான சான்றுகள் இல்லை. எனினும் நாகரிகம் வீழ்ச்சியடைந்து நீர்பாசனம் அழிவடைந்து தீர்த்தேக்கங்கள் அசுத்தமடைந்து அனோபிலிஸ் நுளம்பு பரவுவதற்கான வாய்ப்புகள் உருவாகின எனக் கூற முடியும். இவ்விடயம் நாகரிகம் வீழ்ச்சியடைந்ததின் விளைவே தவிர வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமான விடயம் அன்று.

**ஈரவலயத்தில் காணப்பட்ட கவர்ச்சி**

- படிப்படியாக ஈரவலயத்துக்கு வந்த மக்கள் வரண்ட வலயத்தை விட அங்கு கவர்ச்சி தரக் கூடிய நிலைமைகள் நிலவியமை இந்த வீழ்ச்சிக்கு காரணமானது என்பது சிலரின் கருத்தாக உள்ளது. எனினும் அக்காலத்தின் பிரதான ஜீவனோபாயமாக இருந்த நெற் செய்கையை மேற் கொள்ளக்கூடிய நிலத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் உலர் வலயத்தில் இருந்ததின் காரணமாக இக் கருத்தினை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது உள்ளது. இருப்பினும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் தென்மேற்கு, தெற்கு கடற்கரைப் பிரதேசங்களில் விசேட கவர்ச்சி நிலவியது. யானைத் தந்தம், முத்து, இரத்தினம் போன்ற புராதன வியாபாரப் பொருட்களுக்குப் பதிலாக இக்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தில் வாசனைத் திரடவியங்களுக்கு விசேட கேள்வி நிலவியதாகக் காணப்பட்டது. இலங்கை ஆட்சியாளர்கள் அந்த வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் பயன் பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டனர். வாசனைத் திரவியங்கள் பயிரிடும் பிரதேசங்கள் இக்காலத்தில் பிரசித்தி பெற்ற துறைமுகங்கள் அமைந்த பிரதேசங்கள் என்பவற்றில் மக்களும் அரசர்களும் தமது கவனத்தைச் செலுத்தினர்.

- இதற்கமைய இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய விடயங்கள் பற்றி இவ்வாறு அறிஞர்கள் எடுத்துக் காட்டிய கருத்துக்களில் சில குறைபாடுகள் உள்ளதாகத் தெரிய வருகிறது. இருந்த போதும் வேறு காரணங்களை விட வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள், உள்நாட்டு குழப்பங்கள் என்பன இதற்கு அடிப்படையானவை எனக் கருத முடியும். அனுராதபுரம் பொலன்னறுவைக் காலங்களைப் போல நீண்ட காலம் ஓரிடத்தில் நிலைத்திருப்பதற்குப் பதிலாக மிகக் குறுகிய காலத்தில் அது இடத்துக்கிடம் இக்காலத்தில் மாற்றப்பட்டது. வேறு காரணங்களை விட பாதுகாப்பு பற்றிய கருத்தே இங்கு அடிப்படையானது எனக் காணப்படுகிறது.

**(16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**05) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **வசப மன்னன்**

- யசலாலக திஸ்ஸ மன்னனைக் கொன்று சுப அல்லது சப மன்னனாகுதல்.
- இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் வசபன்.
- வசபனின் ஆதிக்கம் நாடு முழுவதும் பரவியிருந்தது என்பது வம்சகதைகள், ஆவணங்கள் மூலம் வெளிப்படுகின்றமை. மகாவம்சம், பூஜாவலிய, சமந்தபாஸதிகாவி / அனுராதபுரத்தின் தம்மன்னா கல்வெட்டு / வடக்கில் கண்டெடுக்கப்பட்ட பொற் சாசனம் / வெல்லவாய ஹபஸ்ஸ கல்வெட்டு / தெற்கில் சித்துல்பவ்வ / திஸ்ஸ மஹராம, கொடவாய கல்வெட்டு / கிழக்கில் மட்டகளப்பு காசி மோட்டை கல்வெட்டு
- பொத்தா தேவியை இராணியாக நியமித்து 44 ஆண்டுகள் அமைதியாக ஆட்சி நடத்தியமை.
- அரசியல் ரீதியில் உள்நாட்டு கலகங்கள், குழப்பங்கள் மற்றும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் இல்லாத காலம்.
- பொருளாதார ரீதியில் விவசாயத்தை விருத்தி செய்தமை.
- பெருங்குளங்களைக் கட்டுவதில் முன்னோடியாக இருந்தமை. (பெருங்குளங்கள் 11, 12 கால்வாய்கள் நிர்மாணித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது ) மகாவிலச்சிய வாவி மானாகட்டிய வாவி, நொச்சி பொத்தான வாவி, கிரிவடுன்ன வாவி, அலஹர அல்லது அலிசார கால்வாய், மினிப்பே கால்வாய் என்பவற்றை நிர்மாணித்தல்.
- அனுராதபுர நகரத்தை அலங்கரித்தல் (பூங்காக்கள், நீர், அழகிய பொய்கைகள்)
- உருகுணையில் சித்தல பப்பத்தவில் ஆயிரம் தூபிக்கள் அமைத்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- மாகம அனுராநாமய முவலாராமய கட்டுவித்தலும் விகாராராமவைப் புனரமைப்புச் செய்வித்தலும்.
- இராணியான பொத்தாதேவியாலும் வட்டதா மனை நிர்மாணிக்கப்படுதல்.
- பிரதேச நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தியமை. (உத்தர, உருகுணை தேசம் – துடக – தெற்குப் பிரதேசம், வடக்கே நக்கதிவ, இசிரிகிர மந்திரியை அனுப்பி நிர்வாகம் செய்தமை என்பன கல்வெட்டுக்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.)

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

ii. **முதலாம் விஜயபாகுவினால் சோழர் ஆதிக்கத்திலிருந்து இராசரட்டை விடுதலையடைதல்**

- சோழர் ஆதிக்கத்துக்கு எதிராக உபாயங்கள் மிக்கதும் ஒழுங்கமைப்பட்டதுமான போர் நடவடிக்கைகளை முன்னெடுத்தமை. சோழர் ஆதிக்கத்தை தோற்கடித்தல். பல்வேறு இடர்கள், தடைகள் மத்தியில் பரந்த பேரரசுக்கு எதிராக நடத்திய போரில் வெற்றி கண்டமை.

- கேசதாது காசியப்ப, லோகேஸ்வர ஆகிய உருகுணை மன்னர்களை வெற்றி கொள்ளுதல்.

- சோழர்படை உருகுணையை ஆக்கிரமித்தலும் பலுட்டகிரிமன்னனுடான ( பலட்டுமான ) போரில் அவர்களை தோற்கடித்தல். படையினரின் தாக்குதலைச் சந்தித்து வீரராஜேந்திரனால் தோல்வியடைந்து வாகிரிகலவுக்கு பின்வாங்குதல்.

- கேசதாது காசியப்பனின் சகோதரன் ஒருவன் குத்தகாலவில் ஏற்படுத்திய கலகத்தை அடக்கி மகநாககுலவில் இருந்து படையினரை வலுப்பெறச் செய்தல்.

- வீர ராஜேந்திரனின் மரணத்துடன் சோழ நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை தனது சுய நோக்கத்தை நிறைவேற்றுவதனை உபயோகித்து பொலன்னறுவையில் இருந்த சோழரின் படைக்கு மூன்று பக்கங்களாலும் தாக்குதல் நடத்தி தோல்வியடையச் செய்தமை.

- மகநாக குல, வாகிரிகல, அனுராதபுரம், மகாதித்த மேற்குதிசை

- மகநாககுல மாகம புத்தல மகியங்கன்ன பொலன்னறுவை (துட்டகைமுனுவின் பயணப்பாதை)

- மகநாககுல வந்தனகாம, கல்லோயா, பொலன்னறுவை ( கிழக்குத்திசை கி.பி 1070 இல்) இராசரட்டையில் சோழர் ஆதிக்கத்தை வீழ்ச்சியுறச் செய்து இலங்கையை ஒன்றிணைத்து பொலன்னறுவையை தலைநகராக்கி முன்னைய வழக்கத்திற்கமைய நிர்வாகத்தை நடத்தியமை.

- இவ்விதமாக வெளிநாட்டு அச்சுறுத்தல்களைத் தோற்கடிப்பதில் வெற்றி கண்டதுடன் பின்பற்றப்பட்ட நிர்வாகம், வெளிநாட்டுக் கொள்கைகள் காரணமாக மன்னன் மேன்மையானவனாகுதல்.

- மீண்டும் வெளிநாட்டுச் சக்திகள் தாக்குவதைத் தவிர்த்தல், இராஜ தந்திர தொடர்புகளை பரவலாக்குதல்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

### iii. தம்பதெனியா காலத்தில் கலாசாரம்

- இரண்டாம் விஜயபாகு (கி.பி 1232 - 1236) மன்னனுடன் தம்பதெனிய காலம் ஆரம்பமாகுதல்.
- இரண்டாம்விஜயபாகுஇரண்டாம்பராக்கிரமபாகுஅரசர்களின்காலத்தில்கலாசாரமுன்னேற்றத்துக்கு அரச அனுசரணை கிடைத்தது.
- இக்காலம் இந்நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்ட காலமாகும்.

**சமயத்துடன் இணைந்த கலாசார மறுமலர்ச்சி**

- தந்த தாதுவைப் பாதுகாத்து பூசைகள் நிகழ்த்தியமை. பெலகலவில் வைத்திருந்து தந்ததாதுவைப் பாதுகாத்தல், தம்பதெனியாவில் விஜய சுந்தர ராமாவில் தலதா மாளிகை நிர்மாணித்தல், தந்த தாதுவுக்குப் பூஜை நடாத்துதல் தலதா பெரஹர (ஊர்வலம் நடத்துதல்)
- சாசனத்தைப் புனர் நிர்மாணம் செய்து சட்டதிட்டங்களை ( கதிகாவ ) ஏற்படுத்தல். ( இரண்டாம் விஜயபாகுவினால் செய்விக்கப்பட்ட கதிகாவ மற்றும் இரண்டாம் பராக்கிரமபாகுவினால் செய்விக்கப்பட்ட தம்பதெனிய கதிகாவ)
- அனுராதபுரம், பொலன்னறுவை நகரங்களைப் புனரமைப்புச் செய்ததுடன் தீவின் பல்வேறு பகுதிகளிலும் விகாரைகளைப் புனரமைத்தலும் (கம்பளை, களனி வெலிகம, அத்தனகல்ல)
- இரத்தினபுரி மஹாசமன் தேவாலயத்தை நிர்மாணித்தல்.
- பெரஹா நடாத்துதல் (எசல பெரஹர)

**கல்வியின் முன்னேற்றம்**

- இரண்டாம் விஜயபாகு மன்னனின் சொந்த மகன்மார்களான பராக்கிரமபாகு, புவனேகபாகு இளவரசர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கியமை.
- இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் கற்றறிந்த பண்டிதனாக நூலாக்கத்தில் ஈடுபட்டிருந்தமை (கவிசிலுமின, வனவினிஸ, சன்னய, விசுத்திமக்க சன்னய) இதனால் கலிகால சாஹித்திய சர்வக்ஜ பண்டிதர் என்ற பட்டப் பெயரால் குறிப்பிடப்படுதல்.
- பிரிவேனாக்களை கட்டுவித்தல் ( தம்பதெனிய, விஜயசுந்தரராமய, குருணாகல், மகேந்திரபாகு பிரிவேனா, வாகிரகல பிரிவேனா) ஆகிய பிரிவேனாக்கள் கல்வி மத்திய நிலையங்களாக்கப்படுதல்.

Department of Examinations - Sri Lanka

**இலக்கிய மறுமலர்ச்சி**

- சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இலக்கிய நூல்கள் பல தோன்றுதல்.
- கற்ற இல்லத்தார், துறவிகள், பண்டிதர்கள் ஆகியோர் தோற்றம் பெற்றதால் பல்வேறு கருப்பொருள்கள் பற்றி செய்யுள் மற்றும் உரைநடை நூல்கள் எழுதப்பட்டமை.

**பௌத்த சமய நூல்கள் பல எழுதப்பட்டமை**

- சிங்கள மொழியில் – சிதத்கங்கராவ சத்தர்ம ரத்னாவலிய, பூஜாவலிய, யோகா ரணவய, கவிசிலுமின.
- பாளி மொழியில் – ஹத்தவனகல்ல விகாரவம்சய, சமந்த குட வர்ணனாவ, பயோக சித்தி, ஹேசஞ்ஞு மக்ஜுசாவ ரசவாஹினி, ஜீனசரித
- சமஸ்கிருத மொழியில் – தைவக்ஞ காம தேனுவ

**(08 புள்ளிகள்)**

iv. **ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரை**

- சிங்கை ஆரியர் அல்லது விஜயகூழங்கை சக்கரவர்த்தியினால் இந்த ஆரிய பரம்பரை ஆரம்பமாகியமை.
- அவன் 14 ஆ.ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இராச்சியம் ஒன்றை தாபித்தமை. அவன் நல்லூர் கந்தசுவாமி கோவில் உட்பட பல கோவில்களை நிர்மாணித்தமை.
- ஆரிய சக்கரவர்த்திகள் பிராமண குலத்துக்கு உரியவர்கள் என்பதுடன் பாண்டிய இராச்சியத்தின் தெற்குப் பிரதேசமான வெச்சருக்கை நாடு என்ற பிரதேச ஆட்சியாளர் குடும்பத்திலிருந்து வந்த குழுவினர்.
- யாழ்ப்பாண வைபவ மாலை, செகராச சேகர மாலை என்பன அவர்கள் பற்றிய தகவல்களை வழங்கும் முக்கிய மூலாதாரங்கள்.
- ஆரிய சக்கரவர்த்தி ஆட்சியாளர் பன்னிரண்டு பேர் பற்றி குறிப்பிடுகின்றமை.
- குலசேகர சிங்கை ஆரியன் விவசாய விருத்திக்கு அதிக கவனம் செலுத்தியமை.
- விக்கிரமசிங்கை ஆரியன் சிங்கள தமிழ் மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டமை.
- விரோதய சிங்கை ஆரியன் சிங்கள – தமிழ் மக்களிடையே ஒற்றுமையை விருத்தி செய்தமை.

Department of Examinations - Sri Lanka

- மார்த்தாண்ட சிங்கை ஆரியன் கல்வி, விவசாயம் என்பவற்றை முன்னேற்றியதுடன் வன்னியர்மாருடைய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் வெற்றி கண்டமை.

- குணபூஷண சிங்கை ஆரியனின் காலத்தில் யாழ்ப்பாண இராசதானி செழிப்புமிக்கதாக இருந்தமை.

- விரோதய சிங்க ஆரியன் காலத்தில் வன்னியர்களின் வழிகாட்டலினால் சிங்கள மக்கள் ஏற்படுத்திய கலகத்தை அடக்கியமை.

- ஜயவீர சிங்கை ஆரியன் முத்து தொடர்பாக புவனேகபாகு மன்னனுடன் ஏற்படுத்திக் கொண்ட போரில் வெற்றி பெற்று 12 ஆண்டுகள் சுயாதீன ஆதிக்கம் தீவில் பரவுவதில் வெற்றி கண்டமை.

- குணவீர சிங்கை ஆரியன் தீவின் தென் பகுதி பலவற்றையும் தாக்கி அப்பகுதிகளில் தமிழ் மக்களைக் குடியிருக்கச் செய்வதில் வெற்றியடைந்தமை.

- கனக சூரிய சிங்கை ஆரியன் வன்னியர்களுடைய வழிகாட்டல்களினால் ஏற்பட்ட சிங்களவர்களின் கலகங்களை எதிர்நோக்க முடியாது இந்தியாவுக்கு தப்பியோடிய போதும் 17 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் வந்து இராச்சியத்தைப் பொறுப்பேற்றமை.

- பரராஜசேகரின் காலத்தில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்படுத்தல். அவனின் சகோதரன் யாழ்ப்பாணத்தில் தமிழ் கல்லூரி ஒன்றைத் தாபித்து தென் இந்தியாவிலிருந்து பெருமளவு எண்ணிக்கையில் தமிழ் நூல்களைக் கொண்டு வந்ததுடன் நூலாக்கத்திலும் ஈடுபட்டமை. அவனது மருமகனான அரச கேசரி சமஸ்கிருத மொழியிலான இரகுவம்சத்தை தமிழுக்கு மொழி பெயர்த்தமை.

- சங்கிலி 1519 இல் பரராஜசேகரனைக் கொன்று மன்னன் ஆகியமை. இக்காலத்தில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த பிரச்சினை காரணமாக 1566 இல் இவனுக்கு இராச்சியம் இல்லாமல் போனமை.

- மூன்றாம் விக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் கம்பளை இராச்சியத்தைத் தாக்கி அங்கு சில பிரதேசங்களில் வரி வசூலிக்கும் அளவுக்கு பலம் பொருந்தியிருந்தமை.

- ஆறாம் பராக்கிரமபாகு சபுமல் குமாரவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி ஆரிய சக்கரவர்த்திகளைத் தோற்கடித்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- 1619 இல் போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதன் விளைவாக ஆரிய சக்கரவர்த்திகளின் ஆட்சி முடிவுற்றமை.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

# C பகுதி

**06) போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களில் அவர்களின் ஆதிக்கத்தைத் தாபித்த விதத்தினை பின்வரும் விடயங்களின் கீழ் பரிசீலிக்குக.**

**i. கோட்டை இராச்சியத்தில் தங்களின் ஆதிக்கத்தைத் தாபித்தல்**

முக்கியமாகப் பொருளாதார நோக்கத்தையும் இரண்டாவதாக சமய நோக்கத்தையும் கொண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் இந்நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற நிலையைக் காரணமாகக் கொண்டு அரசியல் / பிரதேச ஆதிக்கத்தை கட்டியெழுப்ப முன்வைத்தமை.

- போர்த்துக்கேயர் 1505 இல் வரும் போது கோட்டை இராச்சியத்தின் ஆட்சியாளனாக எட்டாவது விக்கிரமபாகு இருந்தான். இவன் வர்த்தகக் களஞ்சியசாலை ஒன்றையும் தேவாலயம் ஒன்றையும் அமைப்பதற்குப் போர்த்துக்கேயருக்கு அனுமதி வழங்கியமை.

- ஆறாம் விஜயபாகுவின் காலத்தில் 1521 'விஜயபாகு கொல்லய' நிகழ்வின் காரணமாக கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாகப் பிரிந்தமை.
  ஏழாம் புவனேகபாகு - கோட்டை
  மாயாதுன்னை - சீதாவாக்கை
  றைகம் பண்டார - றைகம

- புவனேகபாகுவுக்கும் மாயாதுன்னைக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டங்களின் போது கோட்டை மன்னனான புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியைப் பெற்றதுடன் மாயாதுன்னை முஸ்லிம்களின் உதவியைப் பெற்றமை.

- இப்போர்களில் புவனேகபாகு வெற்றி பெற்ற போதும் சீதாவாக்கை இராச்சியத்தை முழுமையாக பலமிழக்கச் செய்வதில் அவன் வெற்றியடையவில்லை.

- புவனேகபாகுவின் பின்னர் அவனது பேரனான தர்மபால கோட்டை மன்னனாகியதுடன் அவன் போர்த்துக்கேயருக்கு பெருமளவில் கீழ்ப்படிவான ஆட்சியாளனாக இருந்தமை. மாயாதுன்னையும் சீதாவாக்கை இராஜசிங்கனுக்குக் கீழ் சீதாவாக்கை இராச்சியம் விரிவடைந்ததுடன் சீதாவாக்கை ஆட்சியாளர் கோட்டை அதிகாரத்தை கொழும்புக்கு மட்டும் வரையறுப்பதில் வெற்றி கண்டமை.

- எனினும் அதன் பின்னர் சீதாவாக்கை இராச்சியம் விரைவில் வீழ்ச்சியடைந்தமை. இதனிடையே தர்மபால முழுமையாக போர்த்துக்கேயரின் பொம்மை ஆட்சியாளனாக்கியதுடன் அவன் தனது மரண சாசனம் மூலம் கோட்டையைப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்தல்.

- தர்மபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் கைகளைச் சென்றடைதல்.

- 1597 இல் கோட்டைப் பிரதானிகளுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே ஏற்பட்டதெனக் கூறப்படும் மல்வானை ஒப்பந்தத்தினால் போர்த்துக்கேயர் தமது குறிக்கோளை அடைந்தமை.

**(10 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

ii. **யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுதல்**

- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாண இராச்சியமானது யாழ்ப்பாணக் குடா நாடு, புத்தளம், திருகோணமலையின் கரையோரப் பிரதேசம் என்பவற்றை அடக்கியதாக விருத்தி பெற்றிருந்தமை.
- அக்காலத்தில் ஆட்சியாளனாக பரராஜசேகரன் இருந்தமை.
- 16 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி போர்த்துக்கேயர் அத்தகைய கவனத்தைக் கொண்டிருக்காததின் காரணம் அவர்கள் கோட்டை இராசதானி பற்றி அதிக கவனம் செலுத்தியமை.
- வாசனை திரவியங்களின் வர்த்தகத்தினால் இலாபம் பெறுவதற்கான விருப்பு.
- 1520 இலிருந்து அவர்கள் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி விசேட கவனம் செலுத்துவதற்கான காரணங்கள் பல
- சங்கிலி அங்கு கத்தோலிக்க சமயப் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராக நடந்து கொண்டமை.
- பாதுகாப்பை வலுப்படுத்தல்.
- கரையோரத்துக்குஅருகில்கடலில்காணாமல்போனகப்பல்களின்பொருள்களைஅரசுடைமையாக்குதல்.
- இக்காரணங்களை முன்வைத்து போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொண்டமை.
- 1543 இல் சங்கிலிக்கு எதிராக மார்டின் அபொன்ஸ் தி சூசா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு
- 1560 கொன்ஸ்தாந்தின் தி சா பிரகன்சா மேற்கொண்ட ஆக்கிரமிப்பும் போர்த்துக்கேயர் தங்களுக்குக் கீழே பெரியபுள்ளை செகராச சேகரன் என்ற பெயருடைய ஆட்சியாளனை நிய.மித்தல்.
- 1591 இல் மன்டொன்சா மேற்கொண்ட ஆக்கிரமிப்பின் பின்னர் யாழ்ப்பாண இராச்சியத்தை அடிமைப்படுத்தியமை.
- நல்லூர் உடன்படிக்கை மற்றும் ஆரியர் போர்த்துக்கேயரின் ஆட்சி தாபிக்கப்பட்டது.
- 1619 இல் சங்கிலி அதிகாரம் பெற்றதின் பின்னர் ஏற்பட்ட எதிர்ப்பு பிலிப்த ஒலிவேராவினால் பின்னர் அடக்கப்பட்டமை.
- 1621 இல் போர்த்துக்கேயர் முழுமையாக யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்துதல்.

**(06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

7) கீர்த்தி ஸ்ரீ அஇராஜசிங்கனின் சாதனைகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

i. ஒல்லாந்தருடனான தொடர்புகள்

- இந்த நாட்டின் நாயக்கர் அரச வம்சத்துக்குரிய கண்டி இராச்சியத்தின் இரண்டாவது ஆட்சியாளனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் கி.பி. 1747 – 1781 வரை கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தான்.

- தென் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பேணி வந்த நாயக்கர் ஆட்சியாளர்கள் கண்டி ஆட்சியாளர்களாகுதல் கண்டி இராச்சியத்துக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்புகள் மோதல் நிலைமையை அடைவதற்குக் காரணமாகுதல்.

- இந்த மன்னனின் காலத்தில் கண்டிக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான முரண்பாடுகள் போர் நிலைமைக்கு இட்டுச் சென்றமை.

- 1750 களில் அரசனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு இறுதி நிலைக்கு வீழ்ச்சியடைந்ததுடன் மன்னன் ஒல்லாந்தர் கண்டிக்கு வருதலைத் தடை செய்தல்.

- மன்னன் தாழ்நிலப் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்து ஹன்வல்ல மற்றும் மாத்தறை கோட்டைகளைக் கைப்பற்றுதல்.

- மன்னன் ஒல்லாந்தரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக மதுராஸின் முஸ்லிம் ஆட்சியாளனான நவாப்பிடம் யுத்த உதவிகளைக் கேட்ட போதும் அது தோல்வியடைந்தமை.

- இக்காலத்தில் மதராஸின் ஆதிக்கத்தை உறுதியாக்கிக் கொண்டிருந்த ஆங்கிலேயர் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் உதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்தல். ஜோன் பைபஸ் 1762 இல் கண்டிக்கு தூதுப் பணியில் ஈடுபடல், எனினும் கண்டி இராச்சியத்தின் முயற்சி தோல்வியடைந்தமை.

- 1760 – 1765 காலப்பகுதியில் ஒல்லாந்தருக்கும் கண்டி இராச்சியத்துக்கும் இடையில் போர் ஏற்படுதல்.

- 1766 பெப்ரவரி 14 ஆம் திகதி ஹங்குரங்கெட்டவில் உடன்படிக்கைக்கு அணுகியதுடன் மன்னன் 14 நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ள நேரிட்டமை. தீவு முழுவதும் கடற்கரையில் ( கவ்வக ) தூரம் ஒல்லாந்தருக்கு வழங்கப்பட்டமை. கண்டியின் வியாபாரப் பொருட்களை வாங்குவதற்கான ஏக போக உரிமை பெறுதல்.

- ஒப்பந்தத்துக்கு கண்டி பிரதானிகள், அரச சபை அனுமதி கிடைக்காவிட்டாலும் ஒல்லாந்தரின் நோக்கம் நிறைவேறுதலும் கண்டி இராச்சியத்தை வற்புறுத்துவதற்கான ஆற்றலும் ஒல்லாந்தருக்கு ஒப்பந்தம் மூலம் கிடைத்தமை.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

ii. **பௌத்த மறுமலர்ச்சி**

- 1753 இல் வெலிவிற்ற ஸ்ரீ சரணங்கர தேரரின் தலைமையில் சீயத்திலிருந்து இந்நாட்டுக்கு உபசம்பதாவைக் கொண்டு வருதலும் அதனை இங்கு நிலை நாட்டலும்.
- பிக்குமார்களுக்கும் நாட்டில் அமைந்துள்ள விகாரைகளுக்கும் அனுசரணை வழங்குதல்.
- சிவனொளிபாத இடத்தை மீண்டும் பிக்குமாரிடம் ஒப்படைத்தல்.
- கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் புராதன சமய நூல்களை மீண்டும் எழுதுவதற்கு அனுசரணை வழங்கியமையும் கதிகாவத்த சட்டங்கள் தாபித்தலும்.
- நான்கு மகா தேவாலய பெரஹறவை தலதா பெரஹறவுடன் ஒன்றிணைத்தல்.
- பிக்குமார் சங்கத்தை புனரமைத்தலும் சங்கராஜ, மகாநாயக்க, அனுநாயக்க பதவிகளை வழங்கி பிக்குமார் சங்க ஒழுங்கமைப்பை வலுப்பெறச் செய்தல்.
- கல்விக்காக நாடு முழுவதிலும் இருந்து இல்லறத்தார் துறவிகள் எனப் பலரும் கண்டிக்கு வருகை தருதலும், அதன் நீண்ட காலப் பெறுபேறாக மலையக பௌத்த மறுமலர்ச்சி 19 ஆம் நூற்றாண்டில் தாழ்வலய பிரதேசங்களில் பௌத்த மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தியமையும்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**8) “டொனமூர் அரசியல் யாப்பு பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கை அரசியல் யாப்பு விருத்தியில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும்”**

i. **டொனமூர் ஆணைக்குழு வருகை தந்த போது இலங்கையில் பிரித்தானிய ஆளுநராக இருந்தவரின் பெயரைத் தருக.**

ஹர்பட் ஸ்ரன்லி (1927 - 1931) **(01 புள்ளி)**

ii. **டொனமூர் பிரபு தவிர்ந்த அந்த ஆணைக்குழுவில் இருந்த வேறு இரண்டு ஆணையாளர்களின் பெயர்களைத் தருக.**

மதிவ் நேதன், ஜெப்றிபட்லர், ட்ரமன்ட் ஷீல்ட்ஸ்

**(02 புள்ளிகள்)**

iii. **குடியேற்ற நாட்டு அரசாங்கம் டொனமூர் ஆணைக்குழுவை நியமித்தமைக்கு காரணமான விடயங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

- 1924 மனிங் டெவான்ஷயர் அரசியலமைப்பின் குறைபாடுகள். சட்டவாக்கக் கழகத்தில் அதிகாரமும் பொறுப்பும் வேறாக்கப்பட்டிருந்தமை.

- 1924 மனிங் டெவான்ஷயர் சீர்திருத்தங்கள் பற்றி இலங்கையர்கள் திருப்தியடையாமையும் அவர்கள் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமையும்.
  உதாரணம்
  - இலங்கை தேசிய சங்கத்தில் இருந்த ஜேம்ஸ் பீரிஸ் அடங்கிய குழு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினுள் இலங்கைக்கு பொறுப்புடன் கூடிய அரசியல் யாப்பைக் கோரினர்.
  - ஏ. ஈ. குணசிங்க உள்ளிட்ட புரட்சிவாத குழுவினர் சுயராச்சியம் கோரியமை.
  - பொன்னம்பலம் இராமநாதன் உள்ளிட்ட தமிழர் ஒழுங்கமைப்பு சட்டவாக்க சபையில் ஒரு இனத்தவர் ஏனைய இனங்களை விட அதிகமாக இடமளிக்காத விதத்தில் பிரதிநிதித்துவ முறையைக் கோரியமை.
  - ஏ. எவ். மொலமூரே, டி.பி. கொப்ப கடுவ, பி.பி. ரத்னாயக்க உள்ளிட்ட மலையக தேசிய சபை சமஷ்டி அரசியல் முறையைக் கோரியமை.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

iv. **டொனமூர் அரசியல் யாப்பின் முக்கியத்துவத்தை அதன் முக்கிய அம்சங்களின் அடிப்படையில் பரிசீலிக்குக.**

**அரசுக் கழகம் தாபிக்கப்பட்டமை**

- 61 பிரதிநிதிகளைக் கொண்ட அரசுக் கழகத்தை தாபித்தல். அதற்கு சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் என்பன வழங்கப்பட்டிருந்தமை.

- கட்டமைப்பு தேர்தல் தொகுதி அடிப்படையில் வாக்குரிமையினால் தெரிவு செய்யப்பட்ட 50 அங்கத்தவர்கள் ஆளுநரால் பெயரிடப்படும் 8 அங்கத்தவர். அரச உத்தியோகத்தர் 3 பேர். கூட்டங்களின் தலைமைப்பதவி அங்கத்தவர்களிடையே தெரிவு செய்து நியமிக்கப்பட்ட சபாநாயகருக்கு உரியதாகும்.

**நிறைவேற்று குழு முறை :**

நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது அரசு கழக அங்கத்தவர்கள் ஏழு நிறைவேற்று அதிகார சபையாகப் பிரிக்கப்பட்டனர். அந்த நிர்வாகக் குழுக்களுக்கு உரிய செயற்பாட்டுத் துறைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. நிர்வாகக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் தலைவர் நியமிக்கப்பட்டதுடன் மந்திரி என்ற பெயர் வழங்கப்பட்டது. இலங்கைப் பிரதிநிதிகளுக்கு நிர்வாக சபை மூலம் நிர்வாகம் தொடர்பான பயிற்சியும் அனுபவமும் பெறச் சந்தர்ப்பம் ஏற்பட்டமை.

**சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை**

- இதற்கு முன்னர் வாக்குரிமை காணி உரிமை கல்வித் தகைமை அடிப்படையிலேயே வழங்கப்பட்டிருந்தமையால் வாக்குரிமை சனத்தொகையில் 4% ஆக வரையறுக்கப்பட்ட குழுவுக்கே வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அரசியல் யாப்பு மூலம் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலாருக்கும் வாக்குரிமை உரித்தானது. பெருந்தோட்டத்தில் இருந்த இந்தியத் தொழிலாளர் தொடர்பில் வரையறை விதிக்கப்பட்டது. இதுவரையும் நிலவிய வகுப்பு அடிப்படையிலான பிரநிதித்துவ முறை முடிவடைந்தது. இங்கிலாந்துக்கு சர்வசன வாக்குரிமை பெற்று 3 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையே ஆசியாவில் சர்வசன வாக்குரிமை பெற்ற முதல் நாடு ஆகும்.

**அரச உத்தியோகத்தர்கள் மூவர்**

- அரச சேவையில் மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த 3 துறைகள் பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர், சட்ட செயலாளர் என்ற உத்தியோகத்தர் மூவரின் கீழே காணப்பட்டன.

**ஆளுநர்**

- முன்பிருந்த அரசியல் யாப்புடன் ஒப்பிடும் போது இந்த பதவிகளின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அது குறைக்கப்பட்டதோடு மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் உயர்வடைந்தது. எனகினும் நாட்டு நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த ஆளுநரிடம் விசேட அதிகாரப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தன.

- அரசாங்க சேவை ஆணைக்குழு நியமிக்கப்படுதல்.

**(09 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

**09) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று சிறப்புப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

(i) **பத்தொன்பதாம் நூற்றாண்டின் கோப்பிப் பயிர்செய்கை**
(ii) **1848 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்**
(iii) **டி. எஸ். சேனாநாயக்க**
(iv) **தேசியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்**

i. **பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோப்பிப் பயிர்செய்கை**

- அரசின் வர்த்தக ஏகபோகத்தின் கீழ் நிலவிய ஆங்கிலேயரின் பிரதான வருமான வழியான கறுவா வர்த்தகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நலிவடைந்ததால் கறுவாவுக்குப் பதிலாக மாற்று வழியாக கோப்பிப் பயிர்செய்கையில் இடபடுதல்.

- எட்வேட் பார்ண்ஸ் ஆளுநர் கன்னொறுவையிலையும் ஜோர்ஜ் பேட் கம்பளை சிங்கப்பிட்டியவிலும் கோப்பிப் பயிர் செய்கையை பரீட்சார்த்தமாகச் செய்த பின்னர் மலையகப் பகுதிகளில் கோப்பிச் செய்கை வெற்றி கரமாக செய்யக்கூடியதென்பதை அறிந்து கொண்டமை.

- பார்ண்ஸ் ஆளுநர் கோப்பிச் செய்கை விருத்திக்காகவும் வியாபாரிகளுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் நடவடிக்கை மேற்கொண்டமை. பயிர்ச் செய்கையாளர்களுக்குக் கடன் வசதிகள், ஏற்றுமதி வசதிகள், வரிச் சலுகைகள் வழங்குதல், உழைப்பினை இலகுவாகப் பெற்றுக் கொள்ள தோட்டங்களில் சேவையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு இராஜகாரிய சேவையிலிருந்து விலக்களித்தல்.

- மலைநாடு கொழும்பு பெருந்தெருக்கள் தொகுதி விருத்தியடைய போக்குவரத்து வசதிகள் அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் இடம் பெறுதல். ஹென்றி வாட் ஆளுநரால் கண்டி, கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டதால் போக்குவரத்து நடவடிக்கை இலாபகரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் இடம்பெறக் கூடியதாயிருந்தமை.

- கோல்புறூக் ஆலோசனையின்படி சிவில் சேவையாளர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டதால் அவர்கள் கோப்பிச் செய்கையில் ஈடுபடுதல்.

- 1840 இல 12 காணிகளைக் கையகப்படுத்தும் கட்டளைச் சட்டத்தின் மூலம் சுதேசிகளுக்கு உரித்தான எழுத்தாவண உறுதி செய்யப்பட முடியாத காணிகள் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு மிகச் சொற்ப பணத்துக்கு அவற்றை பெருந்தோட்டச் செய்கையாளருக்கு வழங்குதல்.

- இலண்டன் வர்த்தக சந்தையில் இலங்கையின் கோப்பிக்கு அதிகளவு கேள்வி நிலவுதல்.

- தென் இந்திய தமிழ் தொழிலாளர்களை வரவழைத்து அவர்களின் உழைப்பை குறைந்த பணத்துக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தமையால் வியாபாரிகளின் இலாபம் அதிகரித்தல் காரணமாக கோப்பிச் செய்கை விருத்தியடைதல்.

Department of Examinations - Sri Lanka

- இவ்வாறு விருத்தியடைந்த கோப்பிச் செய்கை தற்காலிகமாக வீழ்ச்சியடைந்தமைக்கு உற்பத்தி செலவு அதிகரித்தமை, இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் கோப்பிக்கான கேள்வி குறைவடைதல், வேறு நாடுகளிலிருந்து கோப்பி வழங்குதல் அதிகரித்தல் காரணமாக விலை வீழ்ச்சியடைதல் என்பன செல்வாக்குச் செலுத்தியமை.

- 1851 – 1868 காலப்பகுதியில் மீண்டும் கோப்பியின் விலை உயர்வடைய ஆரம்பித்ததினால் கோப்பிச் செய்கை விருத்தி அடைதல்.

- எனினும் 1868 இன் பின்னர் இலங்கையின் கோப்பித் தோட்டங்களில் ஹெமிலியா வெஸ்ட்ரொக்ஸ் என்ற பெயருடைய இலை வெளிறல் நோய் பரவியதன் காரணமாக கோப்பி முழுமையாக அழிவடைந்தது.

**(08 புள்ளிகள்)**

## ii. 1848 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்

- 1848 இல் ஏற்பட்ட போராட்டம் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போராட்டம் எனக் குறிப்பிடலாம். இப் போராட்டம் முக்கியமாக மாத்தறை, குருணாகல் ஆகிய பிரதேசங்களிலும் சிறிதளவில் கொழும்பிலும் இடம்பெற்றது.

- போராட்டம் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள் பலவாகும்.

### நீண்டகாலக் காரணிகள்

- கோல்புறூக் கமரன் சீர்த்திருத்தங்களின் தாக்கம்
- மலைநாடு, தாழ்நாடு பிரதேசங்களை இணைத்ததின் காரணமாக மலைநாட்டு பாரம்பரிய தனித்துவத்திற்கு தீங்குகள் ஏற்பட்டமை.
- சிவில் சேவையில் உள்ளவர்களுக்கு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கியதின் காரணமாக நிர்வாகம் நலிவடைந்தமை.
- இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டதினால் பரம்பரையாக காரணிகளை அனுபவிக்கும் முறையில் ஏற்பட்ட மாற்றம்
- கம்சபா முறை செயற்படாதிருந்தமையால் கிராம மக்களின் பிரச்சினைகள் தீவிரமடைதல்.
- புதிய நீதிமன்ற முறை செலவு அதிகமுள்ள சிக்கலானதாக இருந்ததினால் கிராம வாசிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்.
- உள்நாட்டு விவசாயம் பற்றிய பிரித்தானியரின் கவனம் குறைவாக இருந்தமை.

### பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் தாக்கம்

- பெருந்தோட்டப் பயிர்செய்கையின் விருத்திக்காக பிரித்தானிய அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியமை.
- ஐரோப்பிய பெருந்தோட்டச் செய்கையாளர் தாழ்நில வியாபாரிகள் தென் இந்திய தொழிலாளர் ஆகியோர் மலைநாட்டுக்குப் புலம் பெயர்தல். மலைநாட்டு பாரம்பரிய மக்கள் வாழ்க்கைக்கு தீமையான தாக்கத்தை ஏற்படுத்தல்.



Department of Examinations - Sri Lanka

- 1840 இல 12 கொண்ட காணி சுவீகரிப்புக் கட்டளைச் சட்டம் Prevention of Encroachment upon Crown Landy நடைமுறைப்படுத்தியதின் காரணமாக விவசாயிகளுக்கு பாரம்பரிய விவசாய நிலங்கள் உரிமை இல்லாது போதல்.
- பெருந்தோட்டங்களுக்காக காடுகளை அழித்தல், உள்நாட்டு விவசாயம் மற்றும் மக்கள் வாழ்க்கை தொடர்பில் தீமையான தாக்கத்தை ஏற்படுத்தல்.
- மலைநாட்டில் மதுபான நிலையங்களைத் திறந்ததின் காரணமாக சமூக சீர்கேடுகள் விரைவாகப் பரவியமை.

**உடனடிக் காரணிகள்**

- சுயவருமானத்தை அதிகரிப்பதற்காக பிரித்தானிய அரசு புதிய வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியமை.
- டொரிங்கடன் ஆளுனரால் புதிய வரிகள் விதிக்கப்பட்டமை. கடைகள் வரி, வண்டி வரி, தோணி வரி, துவக்கு வரி, துறைமுக வரி, முத்திரை வரி, நாய் வரி, சரீர வரி.
- அரசுக்கும் சமயத்துக்கும் இடையே நிலவிய பாரம்பரிய நெருக்கமான தொடர்பு குடியேற்ற நாட்டு அரசினால் கவனத்தில் கொள்ளப்படாமை.
- பிரித்தானிய அரசு இதுவரை பின்பற்றிய கொள்கையை நீக்கி தந்த தாதுவின் பாதுகாப்பை பிக்குமாரிடமும் தியவதன நிலமையிடமும் ஒப்படைத்தல்.
- மலைநாட்டு காரணிகள் தொடர்பில் நீலப் புத்தகத்தில் விடயங்களை உள்ளடக்குவதற்கு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பு காரணமாக மலையக மக்களிடையே நம்பிக்கையின்மை ஏற்படுதல்.
- கொழும்பில் கிறிஸ்தோபர் எலியட்டின் தலைமையில் எதிர்ப்பு ஏற்படுதல். குறிப்பாக விறாந்தை வரிக்கு எதிர்ப்பு தெரிவித்தல் வியட்டிடம் லிபரல் சீர்த்திருத்தம் பற்றிய விருப்பு எழுச்சி பெறுதல்.
- கண்டியில் விசேடமாக துவக்கு வரிக்கு எதிராக கச்சேரிக்கு முன்னால் விவசாயிகள் ஒன்று கூடுதல். பின்னர் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக ஆயுதப் போராட்டமாக அது மாற்றமடைந்தது.
- புரன் அப்பு, கொங்காலே கொட பண்டா போன்ற சாதாரண கிராமவாசிகளின் தலைமைத்துவமும்.
- யுத்த சட்டம் விதித்து அரசாங்கம் கடுமையாக கலகத்தை அடக்கியமை.
- பிரித்தானிய அரடசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கொடுமையான வரிகளை நீக்கி ஆளுநர் டொரிங்கடன், செயலாளர் எமர்சன டெனன்ற் ஆகியோரை மீண்டும் தாய் நாட்டுக்கு அழைத்தல்.

**(08 புள்ளிகள்)**

iii. **டி. எஸ். சேனாநாயக்க**

- 1884 ஒக்டோபர் 21 ஆம் திகதி மீரிகம போத்தல வளவையில் பிறந்தமை.
- பிள்ளைகள் – டட்லி ஷெல்டன் சேனாநாயக்க றொபர்ட் சேனாநாயக்க
- டி. எஸ். சேனாநாயக்கா பெருந்தோட்ட உரிமையாளர், வர்த்தகர், அரசியல்வாதி இவற்றிடையே அரசியல்வாதியாக அவரால் நிறைவேற்றப்பட்ட பணிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

Department of Examinations - Sri Lanka

**அரசியல் பணிகள்**

- மது ஒழிப்பு இயக்கத்தின் அங்கத்தவராகச் செயற்படுதல்.
- 1915 சிங்கள முஸ்லிம் கலவரவேளையில் பிரித்தானிய ஆட்சியாளரால் சிறையில் அடைக்கப்பட்டமை.
- 1919 இல் ஆரம்பமான இலங்கை தேசிய சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவர்.
- 1925 இலிருந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் அங்கத்தவராகச் செயற்படுதல்.
- டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாயம் மற்றும் காணி நிர்வாக சபையின் தலைவராக (மந்திரி) 15 ஆண்டுகள் செயலாற்றியமை.
- விவசாயக் குடியேற்றங்களை ஆரம்பித்தலும் செயற்படுத்துவதில் முன்னோடிப் பணியை நிறைவேற்றுதலும்.
- ஸ்ரீமத் ஐவர் ஜென்னிங்ஸ் தலைமையில் அரசியல் யாப்பு வரைவேட்டினைத் தயாரித்தல்.
- 1946 இல் ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்தல்.
- 1947 பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதம மந்திரியாகச் செயற்படுதல்.
- சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் ஆங்கிலேய ஆட்சியினருடன் உடன்படிக்கையில் கையொப்பமிடல் (பாதுகாப்பு, வெளிநாட்டு தொடர்பு, அரச சேவை)
- இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டமை.
- அவர் 1952 இல் இயற்கை எய்தினார்.

**(8 புள்ளிகள்)**

iv. **தேசியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்**

- ஆரம்பம் தனியார் வர்த்தகம் சேவை என்பவற்றை மக்களிடம் ஒப்படைத்தல் தேசிய மயமாக்கல் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.
- தேசிய மயமாக்கலின் ஆரம்ப கர்த்தா எஸ். டபிள்யு. ஆர் பண்டாரநாயக்க (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இதனை முன்னெடுத்துச் சென்றார்.)
- எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் தாபிக்கப்பட்ட அரசாங்கத்தினால் 1958 இல் முதலில் பஸ் மற்றும் துறைமுகங்கள் தேசிய மயமாக்கப்பட்டன.

Department of Examinations - Sri Lanka

**ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலம்**

- 1960 இல் காப்புறுதி இயக்கம் தேசிய மயமாக்கப்பட்டு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தாபிக்கப்படலும் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்படலும்.
- சாதாரண மக்களின் பணக் கொடுக்கல் வாங்கல்களை வெற்றிகரமாக்குவதை நோக்கமாகக் கொண்டு மக்கள் வங்கி ஆரம்பிக்கப்படுதலும் இலங்கை வங்கியை அரசாங்கத்திடம் ஒப்படைத்தலும்.
- தேசிய மயமாக்கல் நடவடிக்கையின் கீழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுதல்.
- 1971 இல் கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுதல்.
- காணிச் சீர்த்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் ரன்பவும் சமாகம் நிறுவனத்துக்கு உரித்தான தேயிலை, தெங்கு இறப்பர் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படல். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை தாபிக்கப்படுதல்.
- 1972 இல் அரசாங்க தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுதல்.

**தேசிய மயமாக்கல் வீழ்ச்சியடைதல்**

- 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார முறை இதற்குப் பிரதான காரணமாகும்.
- தனியார் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார ஊக்குவிப்பும் பலன்களும் காரணமாக அரசாங்கத் துறையின் நடவடிக்கை நலிவடைந்தமை.
- 1978 இல் இ.போ.ச நீக்கப்பட்டு மத்திய போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டமையால் போக்குவரத்து கொண்டு செல்லல் சேவைகளில் பெருமளவு உரிமை மீண்டும் தனியார் துறைக்கு உரிமையாகுதல் ஆரம்பமாதல்.
- அரச நிறுவகங்கள் அதிக நட்டம் அடைந்தமை காரணமாக அவற்றை மூடிவிடுதல் அல்லது தனியார் துறைக்கு ஒப்படைத்தல்.

**(08 புள்ளிகள்)**

**(8 x 2 = 16 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka